**Q.1** முதன்முதலில் இந்தியாவில், கல்வி வளர்ச்சிக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்குவதை கட்டாயமாக்கிய பிரிட்டிஷ் சட்டம் எது?

**Ans**
✗ A. ஒழுங்குமுறைச் சட்டம், 1773
✗ B. இந்தியக் கவுன்சில்கள் சட்டம், 1892
✗ C. பட்டயச் சட்டம், 1853
✓ D. பட்டயச் சட்டம், 1813

**Q.2** 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியப் பெருங்கடலில் கடல்வழி வர்த்தகத்தை போர்த்துகீசியர்கள் கட்டுப்படுத்த வழிவகை செய்த கொள்கை/செயல்முறை எது?

**Ans**
✓ A. கார்டாஸ் முறை (Cartaz System)
✗ B. வாரிசு இழப்புக் கொள்கை
✗ C. முன்னோக்கு கொள்கை (Forward Policy)
✗ D. துணைப்படைத் திட்டம்

**Q.3** இந்தியாவின் பின்வரும் எந்த மாநிலம், பாகிஸ்தானுடன் ஒரு சர்வதேச எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது?

**Ans**
✗ A. ஹரியானா
✗ B. உத்தரப்பிரதேசம்
✓ C. குஜராத்
✗ D. பீகார்

**Q.4** ஜூன் 29, 2026 அன்று புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் கடைப்பிடிக்கப்பட்ட 20-வது புள்ளியியல் தினத்தின் (Statistics Day) கருப்பொருளானது பின்வருவனவற்றுள் எது?

**Ans**
✗ A. தரவு வாயிலாக டிஜிட்டல் இந்தியா (Digital India Through Data)
✓ B. நிர்வாகத் தரவுகளின் ஆற்றலைக் கட்டவிழ்த்தல் (Unlocking the Potential of Administrative Data)
✗ C. நிலையான வளர்ச்சிக்கான தரவு
✗ D. தேச கட்டமைப்பிற்கான புள்ளியியல்

Blackbook
Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

**Q.5** பின்வருவனவற்றுள் எது, இந்தியத் துணைக்குடியரசுத் தலைவரின் ஒரு அரசியலமைப்புச் சார்ந்த செயல்பாடு அல்ல?

**Ans**
- ✗ A. குடியரசுத் தலைவர் தற்காலிகமாக இல்லாத போது அவரது பணிகளை மேற்கொள்வது
- ✗ B. குடியரசுத் தலைவர் பதவி காலியாகும் போது குடியரசுத் தலைவராகச் செயல்படுதல்
- ✗ C. மாநிலங்களவையின் பதவிவழித் தலைவராகப் பணியாற்றுவது
- ✓ D. நாடாளுமன்றத்தின் கூட்டு அமர்வுகளுக்குத் தலைமை தாங்குதல்

**Q.6** இந்தியாவில் கிராமப்புற விவசாயம் சாராத வேலைவாய்ப்பின் (Rural Non-Farm Employment - RNFE) கட்டமைப்பு ரீதியான விரிவாக்கத்தை மிக நேரடியாகத் தூண்டும் கொள்கை சாதனம் எது?

**Ans**
- ✓ A. NRLM கீழ் சுய வேலைவாய்ப்பை ஊக்குவித்தல்
- ✗ B. MSP மூலம் விவசாயப் பொருட்களின் விலையை நிலைப்படுத்துதல்
- ✗ C. விவசாயிகளுக்கு உற்பத்திக்கான உள்ளீட்டு மானியங்களை வழங்குதல்
- ✗ D. பொது விநியோக அமைப்பு மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்

**Q.7** 1922 இல், ஒத்துழையாமை இயக்கத்தை இடைநிறுத்த மகாத்மா காந்தியைத் தூண்டிய சம்பவம் எது?

**Ans**
- ✓ A. சௌரி சௌரா சம்பவம்
- ✗ B. பார்டோலி சத்தியாகிரகம்
- ✗ C. ஜாலியன் வாலாபாக் படுகொலை
- ✗ D. சைமன் கமிஷனின் வருகை

**Q.8** பின்வரும் தொகுப்புகளில் எது, சுஷிர வாத்தியங்களை (காற்றுக் கருவிகள்) மட்டுமே கொண்டுள்ளது?

**Ans**
- ✓ A. புல்லாங்குழல், ஷெனாய், நாதஸ்வரம்
- ✗ B. வீணை, சிதார், சரோத்
- ✗ C. மஞ்சிரா, கர்தால், ஜல் தரங்
- ✗ D. தபலா, பக்கவாஜ், தோலக்

**Q.9** மே 2026 இல், ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (Asian Productivity Organization) (APO) ஆட்சிமன்றக் குழுக்கூட்டத்தின் 68வது பதிப்பு எங்கு நடைபெற்றது?

**Ans**
- ✓ A. புது தில்லி
- ✗ B. பெங்களூரு
- ✗ C. கொச்சி
- ✗ D. போபால்

**Q.10** 2026-இல் வெளியிடப்பட்ட 'கருணா: தி பவர் ஆஃப் கம்பாஷன்' ('Karuna: The Power of Compassion') என்ற நூலின் ஆசிரியர் யார்?

**Ans**
- ✗ A. அமர்த்தியா சென்
- ✗ B. சசி தரூர்
- ✓ C. கைலாஷ் சத்யார்த்தி
- ✗ D. சேத்தன் பகத்

Section : **General Intelligence and Reasoning**

**Q.11** 'A' என்பது '÷' என்பதை குறிக்கிறது, 'B' என்பது '×' என்பதை குறிக்கிறது, 'C' என்பது '+' என்பதை குறிக்கிறது, மற்றும் 'D' என்பது '−' என்பதையும் குறிக்கிறது, எனில் பின்வரும் சமன்பாட்டில் கேள்விக்குறி '?' உள்ள இடத்தில் என்ன வரும்?
**11 B 3 C 6 D 4 A 2 = ?**

**Ans**
- ✗ A. 36
- ✗ B. 35
- ✓ C. 37
- ✗ D. 38

Blackbook
Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

Q.12 கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு தொகுப்பு ஜோடிகள் பின்பற்றும் அதே அமைப்பைப் பின்பற்றும் ஜோடியைத் தேர்ந்தெடுக்கவும். இரண்டு ஜோடிகளும் ஒரே மாதிரியான அமைப்பைப் பின்பற்றுகின்றன.
**BDK - FGM**
**RJL - VMN**

Ans
- ✗ A. SWV - WYX
- ✗ B. SVV - YXW
- ✓ C. SVV - WYX
- ✗ D. SWV - VRY

Q.13 :: இன் இடது பக்கத்தில் உள்ள எழுத்து-தொகுப்பு ஜோடிக்கு இடையில் பின்பற்றப்படும் அமைப்பு மற்றும் தொடர்பானது, :: இன் வலது பக்கத்தில் பின்பற்றப்படும் தொடர்பைப் போலவே இருக்கும் வகையில், # மற்றும் % ஐ மாற்றும் பின்வரும் எழுத்து-தொகுப்பு எது?
**# : TDO :: PZK : %**

Ans
- ✗ A. # = MUH; % = WGR
- ✗ B. # = MWH; % = WGO
- ✓ C. # = MWH; % = WGR
- ✗ D. # = NWH; % = WGR

Q.14 பின்வரும் எழுத்து, சின்னத்தின் தொடரைப் பார்த்து கேள்விக்கு பதிலளிக்கவும். இடமிருந்து வலமாக மட்டுமே எண்ணப்பட வேண்டும்.
**(இடது) $ C $ @ M * Y @ * Z A £ & C $ % © F M % % $ (வலது)**
அவை ஒவ்வொன்றும் தனக்கு உடனடி முன்பாக ஒரு எழுத்தையும் மற்றும் உடனடி பின்பாக ஒரு எழுத்தையும் கொண்டுள்ளவாறு, எத்தனை சின்னங்கள் உள்ளன?

Ans
- ✗ A. 3
- ✗ B. 2
- ✗ C. 4
- ✓ D. 1

Q.15 ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில், 'angle skill add' என்பது 'ep ba zl' என்றும், 'snake cow angle' என்பது 'ba eu cp' என்றும் குறியிடப்பட்டுள்ளது. எனில், கொடுக்கப்பட்ட மொழியில் 'angle' என்பது எப்படி குறியிடப்படுகிறது?

Ans
- ✗ A. eu
- ✓ B. ba
- ✗ C. zl
- ✗ D. ep

Q.16 ஒரு கேள்வியைத் தொடர்ந்து (I) மற்றும் (II) என எண்ணிடப்பட்ட இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. கூற்றுகளில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் கேள்விக்கு பதிலளிக்க, போதுமானவையா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். இரண்டு கூற்றுகளையும் படித்து, பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்
கேள்வி: M, N, O, P மற்றும் Q ஆகிய 5 தடிகளில், ஒவ்வொன்றும் வெவ்வேறு நீளத்தைக் கொண்டுள்ளன, எந்தத் தடி மிக நீளம் குறைவானது?
கூற்றுகள்:
(I) P ஆனது N-ஐ விட நீளமானது, ஆனால் Q-வை விட நீளம் குறைவானது. O ஆனது ஒரே ஒரு தடியை விட மட்டுமே நீளம் குறைவானது.
(II) Q ஆனது மிக நீளம் குறைவானது அல்ல.

Ans
- ✗ A. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ள தரவுகள் ஒன்றாகச் சேர்ந்தாலும் கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை அல்ல.
- ✗ B. கூற்று I-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, ஆனால் கூற்று II-இல் உள்ள தரவு போதுமானதல்ல.
- ✓ C. கூற்றுகள் I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ள தரவுகள் ஒன்றாக சேர்ந்து (கூற்று I மட்டும் அல்லது கூற்று II மட்டும் தனியாக அல்ல) கேள்விக்குப் பதிலளிக்க போதுமானவை
- ✗ D. கூற்று II-இல் உள்ள தரவு மட்டுமே கேள்விக்குப் பதிலளிக்க போதுமானது, ஆனால் கூற்று I-இல் உள்ள தரவு போதுமானதல்ல.

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

**Q.17** கொடுக்கப்பட்ட இத்தொடரை தர்க்கரீதியாக முழுமையாக்க, பின்வரும் எழுத்து-எண் தொகுப்புகளில் எது கேள்விக்குறிக்கு (?) பதிலாக வரும்?

**VSU 28 TQS 36 ROQ 44 PMO 52 ?**

**Ans**
- ✗ A. NJL 59
- ✗ B. NKM 59
- ✓ C. NKM 60
- ✗ D. NJL 60

**Q.18** ஆங்கில அகரவரிசையின் அடிப்படையில் அமைந்த பின்வரும் நான்கு எழுத்து-தொகுப்பு ஜோடிகளில், மூன்று மட்டும் ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் ஒரே மாதிரியாக உள்ளன. இதனால் அவை ஒரு குழுவை உருவாக்குகின்றன. எனில், அக்குழுவில் சேராத எழுத்துத் தொகுப்பு ஜோடி எது?
(குறிப்பு: மாறுபட்ட ஒன்றானது, எழுத்து-தொகுப்பில் உள்ள மெய்யெழுத்துக்கள்/உயிரெழுத்துகளின் எண்ணிக்கை அல்லது அவற்றின் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இல்லை.)

**Ans**
- ✓ A. AC – HI
- ✗ B. BD – JL
- ✗ C. KM – SU
- ✗ D. HL – PT

**Q.19** ஒரு குறிப்பிட்ட குறியீட்டு மொழியில்,
A @ B என்றால் 'A என்பவர் B-யின் மகள்'
A # B என்றால் 'A என்பவர் B-யின் சகோதரர்'
A $ B என்றால் 'A என்பவர் B-யின் மனைவி'
A % B என்றால் 'A என்பவர் B-யின் தந்தை' எனவும் பொருள்படுகின்றது

மேற்கூறியவற்றின் அடிப்படையில், 'Cori @ Gagan % Yasha # Jagriti $ Vishal' எனில், Cori என்பவர் Vishalக்கு என்ன உறவு ?

**Ans**
- ✗ A. சகோதரி
- ✗ B. மனைவியின் தாய்
- ✗ C. தாய்
- ✓ D. மனைவியின் சகோதரி

**Q.20** P, Q, R, S, T, U மற்றும் V ஆகிய ஒவ்வொருவருக்கும் வாரத்தின் திங்கள்கிழமை தொடங்கி அதே வாரத்தின் ஞாயிற்றுக்கிழமை முடிவடையும் வரை, வாரத்தின் வெவ்வேறு நாட்களில் ஒரு விளையாட்டை விளையாடுகிறார்கள். Q என்பவர் வியாழக்கிழமை விளையாடுகிறார். Q மற்றும் S க்கு இடையே ஒரு நபர் மட்டுமே விளையாடுகிறார், ஆனால் S என்பவர் சனிக்கிழமை விளையாடுவதில்லை. V மட்டுமே T மற்றும் R க்கு இடையே விளையாடுகிறார், ஆனால் T என்பவர் கடைசி நாளில் விளையாடுவதில்லை. V மற்றும் U க்கு இடையே இரண்டு நபர்கள் மட்டுமே விளையாடுகிறார்கள். U என்பவர் எந்த நாளில் விளையாடுகிறார்?

**Ans**
- ✓ A. புதன்கிழமை
- ✗ B. செவ்வாய்க்கிழமை
- ✗ C. வெள்ளிக்கிழமை
- ✗ D. திங்கட்கிழமை

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

**Q.21** ராகவ் என்பவர் புள்ளி A-இலிருந்து தொடங்கி, காரில் மேற்கு நோக்கி 7 km பயணிக்கிறார். பின்னர் வலதுபுறம் திரும்பி 4 km சென்று, மீண்டும் வலதுபுறம் திரும்பி 11 km பயணிக்கிறார். அதன்பிறகு வலதுபுறம் திரும்பி 10 km பயணிக்கிறார். இறுதியாக வலதுபுறம் திரும்பி 4 km சென்று புள்ளி P-யில் நிற்கிறார். மீண்டும் புள்ளி A-வை அடைய, அவர் எவ்வளவு தூரம் (மிகக் குறுகிய தூரம்) மற்றும் எந்த திசையில் பயணிக்க வேண்டும்? குறிப்பிடப்படாத வரை அனைத்து திருப்பங்களும் 90 ° திருப்பங்கள் மட்டுமே.)

**Ans**
- ✗ A. 7 km தெற்கு
- ✗ B. 7 km வடக்கு
- ✗ C. 6 km தெற்கு
- ✓ D. 6 km வடக்கு

**Q.22** கொடுக்கப்பட்ட தொடரில் கேள்விக்குறிக்கு (?) பதிலாக என்ன வர வேண்டும்?

277 232 191 154 121 92 ?

**Ans**
- ✗ A. 76
- ✗ B. 63
- ✗ C. 71
- ✓ D. 67

**Q.23** இந்த கேள்வி பின்வரும் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டது.
RUN NET SEE DEN
வலதுபுறத்தில் உள்ள இரண்டாவது வார்த்தையின் முதல் எழுத்துக்கும் மற்றும் இடதுபுறத்தில் உள்ள முதல் வார்த்தையின் இரண்டாவது எழுத்துக்கும் இடையே ஆங்கில அகரவரிசையின் படி ,எத்தனை எழுத்துக்கள் உள்ளன?

**Ans**
- ✓ A. 1
- ✗ B. 6
- ✗ C. 2
- ✗ D. 4

**Q.24** ஒரு குறிப்பிட்ட குறியீட்டில்,
'students attends online classes' என்பது 'ul pv um ji' என்றும்,
'learning classes improves skills' என்பது 'ly np pv ci' என்றும்,
'online meeting communication learning' என்பது 'um bh gh np' என்றும் குறியிடப்பட்டுள்ளது.
(அனைத்துக் குறியீடுகளும் இரண்டு எழுத்துகள் மட்டுமே.)

'skills' என்பதற்கான சாத்தியமான குறியீடு என்ன?

**Ans**
- ✗ A. 'um' அல்லது 'ci'
- ✓ B. ci' அல்லது 'ly'
- ✗ C. 'ci' அல்லது 'pv'
- ✗ D. pv' அல்லது 'np'

**Q.25** ஒரு குறிப்பிட்ட தர்க்கத்தைப் பின்பற்றி, 32 என்பது 129 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, 44 என்பது 177 உடன் தொடர்புடையது. அதே தர்க்கத்தைப் பின்பற்றி, பின்வருவனவற்றில் 82 என்பது எதனுடன் தொடர்புடையது?
(குறிப்பு: எண்களை அதன் கூறு (constituent) இலக்கங்களாகப் பிரிக்காமல், முழு எண்களில் செயல்பாடுகள் செய்யப்பட வேண்டும். எ.கா. 13. 13 -இல் கூட்டல் / கழித்தல் / பெருக்கல் போன்ற செயல்பாடுகளைச் செய்யலாம். 13 ஐ 1 மற்றும் 3 ஆக பிரித்த பின்னர் 1 மற்றும் 3 இல் கணித செயல்பாடுகளைச் செய்வது அனுமதிக்கப்படாது)

**Ans**
- ✗ A. 342
- ✓ B. 329
- ✗ C. 334
- ✗ D. 327

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

**Q.26** **பொது இடங்களில் பயன்படுத்தப்படும் தங்களது லேப்டாப்-ஐ ஒரு மாணவர் பாதுகாக்க விரும்புகிறார். லேப்டாப் திருடு போவதற்கு எதிராக, மிகவும் பயனுள்ள பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கை எது?**

**Ans**
- ✗ A. முக்கிய கோப்புகளின் வழக்கமான பேக்கப்-களை உருவாக்குதல்
- ✗ B. புதுப்பிக்கப்பட்ட ஆண்டிவைரஸ் மென்பொருளை நிறுவுதல்
- ✓ C. லேப்டாப் உடன் இணைக்கப்பட்ட ஒரு செக்யூரிட்டி கேபிள் லாக்கைப் பயன்படுத்துதல்
- ✗ D. பார்வையாளர்களுக்கான கெஸ்ட் அக்கவுண்ட்களை அனுமதிப்பது

**Q.27** **ஒரு சிக்கலான திட்டமிடல் அமைப்பை நிர்வகிப்பதற்கான ஒரு ஸ்பிரெட்ஷீட்டில் (spreadsheet), ஒரு பயனர் Z9A-வில் தொடங்கி, மூன்றாவது கேரக்டரில் அகரவரிசைப்படி அதிகரித்து, Z-க்குப் பிறகு என ரீசெட் (reset) செய்யப்படும் பிராஜெக்ட் கோடுகளுக்கான (project codes) ஒரு தனிப்பயன் வரிசையை அமைக்கிறார் (எ.கா., Z9A, Z9B, ..., Z9Z, Z9AA, ...). இந்த வடிவத்தை நீட்டிப்பதற்காக ஃபில் ஹேண்டிலை இழுத்த பிறகு, அதன் விளைவாக வரும் தொடரானது Z9AA-க்குப் பதிலாக எதிர்பாராதவிதமாக Z9Z-இலிருந்து Z10A-க்குத் ஜம்ப் செய்கின்றது. இந்தத் தொடர் முன்னேற்றத்தில்(series progression) ஏற்பட்ட இந்த விலகலுக்கு, எந்த செட்டப் எர்ரர் பெரும்பாலும் காரணமாக இருந்திருக்கலாம்?**

**Ans**
- ✗ A. ஸ்பிரெட்ஷீட் (spreadsheet) செட்டிங்குகளில் தொடருக்கான கஸ்டம் லிஸ்ட் (custom list) கான்ஃபிகர் (configure) செய்யப்படவில்லை, எனவே எக்செல் (Excel) அதன் டிஃபால்ட் எண் அதிகரிப்பு விதிக்கு திரும்பியது.
- ✗ B. ஆட்டோஃபில்லிற்காக (autofill) தேர்ந்தெடுக்கப்பட்ட செல் ரேஞ்ச் (cell range) மிகவும் குறுகியதாக இருந்தது, இதனால் எக்செல் (Excel) தொடரைத் தொடராமல் கடைசி மதிப்பை (last value) மீண்டும் செய்ய வழிவகுத்தது.
- ✗ C. தொடருக்கான செல் ஃபார்மேட்டிங் (cell formatting) ஜெனரலுக்கு (General) பதிலாக டெக்ஸ்டிற்கு (Text) அமைக்கப்பட்டது, இதனால் ஃபில் ஹேண்டில் (fill handle) பேட்டர்னைத் தவறாகப் புரிந்துகொண்டது.
- ✓ D. சீக்வென்ஸ் ஜெனரேஷன் (sequence generation) உத்தேசிக்கப்பட்ட ஆல்ஃபாநியூமரிக் (alphanumeric) வடிவத்தை அங்கீகரிப்பதற்குப் பதிலாக எண் பகுதியை அதிகரிக்கக்கூடியதாகக் கருதியது.

**Q.28** **ஒரு ஃபைலின் லொகேஷனை மாற்றாமல், கிராஃபிக்கல் இன்டர்ஃபேஸைப் (graphical interface) பயன்படுத்தி அதன் பெயரை மட்டும் மாற்ற விரும்பினால், நீங்கள் வழக்கமாக என்ன செய்வீர்கள்?**

**Ans**
- ✗ A. ஃபைலை டெலீட் செய்து மற்றும் புதிய ஃபைல் ஒன்றை உருவாக்குதல்
- ✓ B. ஃபைலில் ரைட் கிளிக் செய்து, 'Rename' என்பதைத் தேர்ந்தெடுத்தல்
- ✗ C. ஃபைலைத் திறந்து, 'Save As' என்பதைக் கிளிக் செய்தல்
- ✗ D. ஃபைலை ஒரு புதிய ஃபோல்டருக்கு டிராக் செய்தல்

**Q.29** **ஒரு ஸ்பிரெட்ஷீட்டில் இரகசிய அறிக்கையை எடிட் செய்யும் போது, ஜெயின் தேர்ந்தெடுக்கப்பட்ட டெக்ஸ்ட் பிளாக்கை ஒரு ஷீட்டிலிருந்து மற்றொரு ஷீட்டிற்கு நகர்த்த விரும்புகிறார், பின்னர் உடனடியாக அந்த நகர்வைத் தவிர்த்து (undo) அதற்குப் பதிலாக அதே பிளாக்கை மூன்றாவது ஷீட்டில் நகலெடுக்க (duplicate) விரும்புகிறார். அவர் மவுஸ் அல்லது மெனுவைப் பயன்படுத்தாமல், Ctrl, Tab மற்றும் C, V, S, X, Z மற்றும் F ஆகிய எழுத்துக்களைக் கொண்ட கீபோர்டு ஷார்ட்கட்களை மட்டுமே பயன்படுத்தினால், தரவு இழப்பு இல்லாமல் இந்த வேலையைச் சரியாக முடிக்க எந்த வரிசைமுறையில் இந்த ஷார்ட்கட்களைப் பயன்படுத்த வேண்டும்?**

**Ans**
- ✓ A. முதலில் Ctrl+X, பின்னர் Ctrl+V, அடுத்து Ctrl+Z, இறுதியாக Ctrl+C-ஐத் தொடர்ந்து Ctrl+V
- ✗ B. முதலில் Ctrl+V, பின்னர் Ctrl+C, அடுத்து Ctrl+Tab, இறுதியாக Ctrl+F-ஐத் தொடர்ந்து Ctrl+V
- ✗ C. முதலில் Ctrl+S, பின்னர் Ctrl+X, அடுத்து Ctrl+F, இறுதியாக Ctrl+Tab-ஐத் தொடர்ந்து Ctrl+V
- ✗ D. முதலில் Ctrl+C, பின்னர் Ctrl+V, அடுத்து Ctrl+S, இறுதியாக Ctrl+X-ஐத் தொடர்ந்து Ctrl+V

Get India's No 1 Vocab Preparation App for FREE : **Blackbook : English Vocabulary**
GET IT ON Google Play

**Q.30** வனவிலங்கு மறுவாழ்வு தரவைக் (wildlife rehabilitation data) டிராக்கிங் (tracking) செய்வதற்கான பிரத்தியேகமான சாஃப்ட்வேரை உருவாக்கும் குழுவை மேற்பார்வையிடும் போது, ஒரு பிராஜெக்ட் மேனேஜர் இந்த நோக்கத்திற்காக மிகவும் பொருத்தமான அப்ளிகேஷன் சாஃப்ட்வேர் வகையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தகவமைப்பு (adaptability), தரவுத் தனித்துவம் (data specificity) மற்றும் ஏற்கனவே உள்ள தரவுகளுடன் (databases), ஒருங்கிணைப்பு போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு, அந்த புராஜெக்ட்டின் தேவைகளுடன் சிறப்பாகப் பொருந்தும் அணுகுமுறை எது?

**Ans**

✗ A. பதிவேடு ஸ்டோரேஜிற்கான (record storage) ஓபன் சோர்ஸ் மீடியா எடிட்டிங் சாஃப்ட்வேரை சார்ந்திருத்தல்

✗ B. மேனுவல் டேட்டா என்ட்ரி-க்கான டெம்ப்ளேட்டுகளுடன் கூடிய ஜெனரிக் ஆபீஸ் சூட்டைப் (generic office suite) பயன்படுத்துதல்

✔ C. வனவிலங்கு மறுவாழ்வு பணிப்பாய்வுகளுக்காக (workflow) வடிவமைக்கப்பட்ட ஒரு தனிப்பயனாக்கப்பட்ட டேட்டா மேனேஜ்மென்ட் அப்ளிகேஷனை நிறுவுதல்

✗ D. விலங்குகளின் பதிவேடுகளை டிராக் செய்வதற்கு, ஒரு ஸ்டாண்டர்ட் அக்கவுண்டிங் பேக்கேஜை தழுவுதல் (Adapting)

**Q.31** E-காமர்ஸை பாரம்பரிய சில்லறை வணிகத்திலிருந்து மிக நேரடியாக வேறுபடுத்திக் காட்டும் அம்சம் எது?

**Ans**

✗ A. இன்வென்டரி ரெக்கார்டுகளை மேனுவலாக நிர்வகித்தல்

✗ B. காகிதம் அடிப்படையிலான வாடிக்கையாளர் சேவைப் படிவங்களைப் பயன்படுத்துதல்

✗ C.
பிரத்தியேக இன்-ஸ்டோர் தயாரிப்பு விளம்பரம்

✔ D. இணையத்தின் வழியாகப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் திறன்

**Q.32** ஃபைல்கள்காபி செய்யப்பட்டாலும், அங்கீகரிக்கப்படாத பயனர்களால் சென்ஸிட்டிவான (sensitive) ஃபைல்களைப் படிக்க முடியாது என்பதை எந்த முறை உறுதி செய்கிறது?

**Ans**

✔ A. என்க்ரிப்ஷன்

✗ B. பாஸ்வேர்ட் பாதுகாப்பு

✗ C. ஃபயர்வால்

✗ D. ஆண்டிவைரஸ் சாப்ட்வேர்

**Q.33** ஒரு மாணவர் பெர்சனலைஸ்டு டிராக்கிங் இல்லாத மற்றும் பல மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலான தேடல் முடிவுகளை விரும்புகிறார். இந்த விளக்கத்திற்கு எந்த சர்ச் என்ஜின் சிறப்பாக பொருந்துகிறது?

**Ans**

✗ A. பிங் (Bing)

✗ B. கூகுள் (Google)

✗ C. Yahoo

✔ D. DuckDuckGo

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

**Q.34** **ஒரு வட்டார செய்தி நிறுவனமானது, களச் செய்தியாளர்களுக்காக டேப்லெட்டுகள் மற்றும் மொபைல் போன்களைப் பயன்படுத்தி ஒரு டிஜிட்டல் செய்தி வழங்கும் தளத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளது. நிகழ்நேர வாய்ஸ் டிக்டேஷன் (real time voice dictation), ஆஃப்லைன் தரவு சேமிப்பு மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஜியோ-டேக்கிங் (geo-tagging) சாப்ட்வேர் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை தடையின்றி ஒருங்கிணைக்கக்கூடிய ஒரு ஆப்பரேட்டிங் சிஸ்டம் அந்த நிறுவனத்திற்கு தேவைப்படுகிறது; அதே வேளையில், அவ்வப்போது வரும் OS அப்டேட்டுகள், இந்த சிறப்பு செயல்பாடுகளை பாதிக்காது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அவர்களின் பீல்டு டிவைஸ்களுக்கு, நீண்ட கால நம்பகத்தன்மை மற்றும் செயல்பாட்டு ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த, எந்த உத்தி மிகவும் பொருத்தமானதாகும்?**

**Ans**

✗ A. பிரவுசர் ஆப்களிலிருந்து அணுகப்படும் ஒரு கிளவுட்-அடிப்படையிலான OS இடைமுகத்தை சார்ந்திருக்கவும்

✗ B. கேமிங் அப்ளிக்கேஷன்களுக்கு உகந்த தனியுரிமை டேப்லெட் OS ஐத் தேர்ந்தெடுக்கவும்

✓ C. எண்டர்பிரைஸ்-மட்டத்திலான அப்டேட் கட்டுப்பாடுகளுடன் கூடிய, தனிப்பயனாக்கக்கூடிய ஒரு ஓப்பன் சோர்ஸ் மொபைல் OS இல் இயங்குக்கூடிய சாதனங்களைப் பயன்படுத்தவும்

✗ D. ஆட்டோமேட்டிக் அப்டேட்டுகள் எனேபில்டு செய்யப்பட்ட நிலையான நுகர்வோர் மொபைல் OS ஐப் பயன்படுத்தவும்

**Q.35** **ஒரு வணிகத்தில் பலவீனமான சைபர் செக்யூரிட்டி (cyber security)-இன் விளைவை, பின்வரும் எந்தச் சூழ்நிலையானது மிகத் தெளிவாக விளக்குகிறது?**

**Ans**

✗ A. காலாவதியான உபகரணங்களால் கம்ப்யூட்டர்கள் மெதுவாக இயங்குகின்றன

✗ B. பணியிட அழுத்தத்தால் பணியாளர் விற்றுமுதல் அதிகரிக்கிறது

✗ C. பணியாளர்கள் வாடிக்கையாளர் சேவையில் பயிற்சி பெறுகிறார்கள்

✓ D. ஒரு சில்லறை விற்பனையாளரின் வாடிக்கையாளர் கிரெடிட் கார்டு விவரங்கள் ஒரு டேட்டா அத்துமீறலால் திருடப்படுகின்றன

**Q.36** **MS Wordஇல், மெயில் மெர்ஜ் செய்யும்போது, ஒரு குழு நிகழ்வில் கலந்துகொள்பவர்களுக்கு, ஒவ்வொரு அழைப்பிதழிலும் ஒரு தனிப்பயன் இருக்கை எண்ணுடன் கூடிய பிரத்யேக அழைப்பிதழ்களை அனுப்ப விரும்புகிறது. ஒவ்வொரு பெறுநருக்கும் இருக்கை எண்கள் சரியாகத் தோன்றுவதை எந்தப் படிநிலை உறுதிசெய்யும்?**

**Ans**

✗ A. பிரதான ஆவணத்தில் (main document) ஒரு நிலையான இருக்கை எண்ணை இன்செர்ட் செய்யவும்

✗ B. ஒவ்வொரு பெறுநருக்கும் இருக்கை எண்ணை கைமுறையாகச் (manually) சேர்க்கவும்

✗ C. தரவை மெர்ஜ் செய்வதற்கு முன் பிரிண்ட் விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும்

✓ D. டேட்டா சோர்ஸிலிருந்து இருக்கை எண் ஃபீல்டை (eat number field) முக்கிய ஆவணத்தில் இன்செர்ட் செய்யவும்

**Q.37** **பகிரப்பட்ட USB சாதனங்களின் மூலம், எந்த வகை வைரஸானது பரவ அதிக வாய்ப்புள்ளது?**

**Ans**

✗ A. மேக்ரோ வைரஸ்

✗ B. ஃபைல்களைப் பாதிக்கும் வைரஸ்

✓ C. பூட் செக்டார் வைரஸ்

✗ D. நெட்வொர்க் வார்ம்

**Q.38** **MS எக்ஸலில் இரண்டு ரோ எண்களுக்கு (row numbers) இடையே உள்ள பவுண்டரியை டபுள்-கிளிக் செய்வதன் விளைவு என்ன?**

**Ans**

✗ A. தேர்ந்தெடுக்கப்பட்ட ரோவானது டெலீட் செய்யப்படுகிறது

✓ B. மிக உயரமான உள்ளடக்கத்திற்குப் பொருந்தும் வகையில் ரோவின் உயரம் தானாகவே சரிசெய்யப்படுகிறது

✗ C. மிக நீளமான உள்ளீட்டிற்குப் பொருந்தும்படி காலத்தின் அகலம் மாறுகிறது

✗ D. தேர்ந்தெடுக்கப்பட்ட ரோ-க்கள் மெர்ஜ் செய்யப்படுகின்றன

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary

GET IT ON Google Play

**Q.39** **MS பவர்பாயின்ட்- இல் உள்ள எந்த மெனுவில் ஒரு ஸ்லைடில் ஒரு வேர்ட் டேபிள் அல்லது ஒரு எக்ஸெல் வர்க்ஷீட்டை இன்ஸெர்ட் செய்ய அனுமதிக்கிறது?**

Ans
- ✗ A. டிசைன்
- ✗ B. வ்யூ
- ✗ C. ரிவியூ
- ✓ D. இன்சர்ட்

**Q.40** **மெனு பாருக்கு கீழே உள்ள அதற்குரிய தொடர்புடன் கூடிய ஐகானை நீங்கள் சரிசெய்யும் போதெல்லாம், எண்ணிடப்பட்ட அனைத்துப் பட்டியல்களும் (numbered lists) உடனடியாகத் தங்கள் இண்டேன்ஷன் செட்டிங்குகளை(indentation settings) மாற்றிக்கொள்ளும் வகையில், வேர்டில் ஒரு ப்ராஜக்ட் சம்மரியை வடிவமைக்குமாறு ஒரு டீம் லீடர் உங்களைக் கேட்கிறார். மற்ற பாராகிராஃப் ஸ்டைலை (paragraph styles) பாதிக்காமலும் அல்லது ஒவ்வொரு பட்டியலையும் மேனுவலாக அப்டேட் செய்யாமலும் எந்தச் செயல்முறை இந்த நோக்கத்தை மிகவும் நேரடியாக நிறைவேற்றுகின்றது ?**

Ans
- ✗ A. முதலில், எண்ணிடப்பட்ட பட்டியல்களைத் தேர்ந்தெடுக்கவும், பின்னர் மெனு பாருக்கு கீழே உள்ள டிக்ரீஸ் இன்டென்ட் (decrease indent) ஐகானைப் பயன்படுத்தவும்.
- ✗ B. முதலில், எண்ணிடப்பட்ட பட்டியல்களைத் தேர்ந்தெடுக்கவும், பின்னர் மெனு பார் (menu bar) கீழே உள்ள போல்ட் (bold) ஐகானைப் பயன்படுத்தவும்.
- ✗ C. முதலில், எண்ணிடப்பட்ட பட்டியல்களைத் தேர்ந்தெடுக்கவும், பின்னர் மெனு பார் (menu bar) கீழே உள்ள பத்தி சீரமைப்பு (paragraph alignment) ஐகானைப் பயன்படுத்தவும்.
- ✓ D. முதலில், எண்ணிடப்பட்ட பட்டியல்களைத் தேர்ந்தெடுக்கவும், பின்னர் மெனு பாருக்கு கீழே உள்ள இன்க்ரீஸ் இன்டென்ட் (increase indent) ஐகானைப் பயன்படுத்தவும்.

**Q.41** **ஒரு சிறிய இலாப நோக்கற்ற அமைப்பு, MS Word-ஐப் பயன்படுத்தி, அதன் நன்கொடையாளர்களுக்காகத் தனிப்பயனாக்கப்பட்ட மெயிலிங்க் லேபிள்களை (mailing labels) உருவாக்க விரும்புகிறது. ஆனால், இம்போர்ட் செய்யப்பட்ட ஒரு ஸ்பிரெட்ஷீட்டில் (spreadsheet) இருந்து ஒவ்வொரு லேபிளும் சரியான முகவரியைப் பெறுவதை அது உறுதிசெய்ய வேண்டும். ஒவ்வொரு லேபிளும் சரியான நன்கொடையாளர் தகவலைக் காண்பிக்கும் வகையில், ஸ்பிரெட்ஷீட் தரவைச் சரியாக இணைப்பதற்கு எந்தப் படிநிலை இன்றியமையாதது?**

Ans
- ✗ A. ஒவ்வொரு கொடையாளரின் முகவரியையும் லேபிள் டெம்ப்ளேட்டில் (label template) மேனுவலாக காப்பி செய்து பேஸ்ட் செய்தல்
- ✗ B. எந்தவொரு நன்கொடையாளர் தகவலையும்இன்செர்ட் செய்வதற்கு முன் ஒரு டெஸ்ட் பேஜ்ஜை (test page) அச்சிடுதல்
- ✗ C. லேபிள் மெயில் மெர்ஜை (mail merge) தொடங்குவதற்கு முன் ஸ்பிரெட்ஷீட்டை Word-ல் திறப்பது
- ✓ D. ஸ்பிரெட்ஷீட் தரவு மூலத்தை (data source) இணைத்த பிறகு லேபிள் டெம்ப்ளேட்டில் மெர்ஜ் ஃபீல்டுகளைச் (merge fields) இன்செர்ட் செய்தல்

**Q.42** **MS பவர்பாயின்ட்- இல் உள்ள எந்த அம்சம், ஒரு சீரான வடிவமைப்பை பராமரிக்கும் அதே வேளையில், அனைத்து ஸ்லைடுகளிலும் பக்க எண்கள் அல்லது தேதி போன்ற மீண்டும் மீண்டும் வரும் தகவல்களைக் காண்பிக்க உங்களை அனுமதிக்கிறது?**

Ans
- ✗ A. ஒவ்வொரு ஸ்லைடிலும் பின்னணி படங்களை மாற்றுவது
- ✗ B. தனித்தனி டைட்டில் ஸ்லைடுகளைப் பயன்படுத்துவது
- ✓ C. ஸ்லைடு மாஸ்டரில் ஹெடர்கள் மற்றும் ஃபூட்டர்களை சேர்ப்பது
- ✗ D. தனிப்பட்ட ஸ்லைடுகளில் டெக்ஸ்ட் பாக்ஸ்கள்-ஐ செருகுவது

**Q.43** **ஒரு கார்ப்பரேட் சுற்றுச்சூழலில், அங்கீகரிக்கப்படாத நெட்வொர்க் அணுகலைத் தடுப்பதில், எந்த செக்யூரிட்டி நடைமுறையானது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்?**

Ans
- ✗ A. நெட்வொர்க்கை தனித்து பிரிக்கப்பட்ட சப்நெட்களாக பிரித்தல்
- ✓ B. அனைத்து பயனர்களுக்கும் மல்டி-பேக்டர் ஆதென்டிகேஷனை செயல்படுத்துவது
- ✗ C. அனைத்து கணக்குகளுக்கும் வலுவான பாஸ்வேர்டுகளை மட்டுமே பயன்படுத்துவது
- ✗ D. அனைத்து ஆபரேட்டிங் சிஸ்டம்களையும் தவறாமல் அப்டேட் செய்வது

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

**Q.44** லதா தனது கிராஃபிக் எடிட்டிங் டூலில் உள்ள அனைத்து ஆப்ஜெக்டுகளையும், கீபோர்டு ஷார்ட்கட்களை மட்டும் பயன்படுத்தி விரைவாக காப்பி செய்ய விரும்புகிறார். Tab, C, V, S அல்லது F ஆகிய கீக்களில், அவர் எந்த Ctrl கீ காம்பினேஷனை முயற்சிக்க வேண்டும்?

**Ans**

✔ A. Ctrl + C

✘ B. Ctrl + F

✘ C. Ctrl + Tab

✘ D. Ctrl + V

**Q.45** உங்கள் பவர்பாயிண்ட் ஸ்லைடுகளில் ஒரு ஹெடர் அல்லது ஃபூட்டர்-ஐச் சேர்ப்பதற்கான விருப்பத்தை எங்கே அணுகலாம்?

**Ans**

✔ A. Insert tab இல்

✘ B. Design tab இல்

✘ C. Review tab இல்

✘ D. Transitions tab இல்

Section : **Mathematics**

**Q.46** $2x^4 - kx^3 + 4x^2 + 5x - 8 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்களின் கூட்டுத்தொகை 3 எனில் k இன் மதிப்பைக் கண்டறியவும்.

**Ans**

✔ A. 6

✘ B. 4

✘ C. 5

✘ D. 3

**Q.47** இரண்டு எண்களின் விகிதம் 4: 1 மற்றும் அவற்றின் மீ.பொ.வ (HCF) 47 எனில் அவற்றின் மீ.பொ.ம (LCM) என்ன?

**Ans**

✘ A. 47

✘ B. 376

✔ C. 188

✘ D. 94

**Q.48** 294, 210 மற்றும் 378 ஐ சரியாகப் வகுக்கும் மிகப்பெரிய எண்ணைக் கண்டறியவும்.

**Ans**

✔ A. 42

✘ B. 28

✘ C. 63

✘ D. 21

**Q.49** இரண்டு ஒத்த முக்கோணங்களின் பக்கங்கள் 3 : 5 என்ற விகிதத்தில் உள்ளன. சிறிய முக்கோணத்தின் பரப்பளவு 108 $cm^2$ எனில், பெரிய முக்கோணத்தின் பரப்பளவைக் கண்டறியவும்.

**Ans**

✘ A. 230 $cm^2$

✘ B. 320 $cm^2$

✔ C. 300 $cm^2$

✘ D. 260 $cm^2$

**Q.50** ஒரு கோடானது, (4,3) என்ற புள்ளி வழியாகச் சென்று, x-அச்சை 8 இல் வெட்டுகிறது. எனில், அந்நேர்க்கோட்டின் y-வெட்டுத்துண்டைக் (intercept) காண்க.

**Ans**

✘ A. 3 அலகுகள்

✘ B. 1 அலகு

✘ C. 4 அலகுகள்

✔ D. 6 அலகுகள்

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

Q.51 8 மற்றும் 24-க்கு இடையே 3 கூட்டுச் சராசரிகள் உட்செருகப்பட்டால், இரண்டாவது கூட்டுச் சராசரியானது _______ ஆகும்.

Ans
- ✗ A. 18
- ✓ B. 16
- ✗ C. 12
- ✗ D. 14

Q.52 முதல் மற்றும் இரண்டாம் உறுப்புகள் முறையே 35 மற்றும் 50 ஆகக் கொண்ட ஒரு கூட்டுத்தொடர் வரிசையின் 36வது உறுப்பு _________ ஆகும்.

Ans
- ✗ A. 525
- ✓ B. 560
- ✗ C. 545
- ✗ D. 575

Q.53 வெட்டு கணத்தின் மீதான சேர்ப்புக் கணத்தின் பங்கீட்டு விதியை உணர்த்தும் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

Ans
- ✗ A. ∩(∪)=(∩)∩(∩)
- ✗ B. $A\cup(B\cap C)=(A\cap B)\cup(A\cap C)$
- ✓ C. $A\cup(B\cap C)=(A\cup B)\cap(A\cup C)$
- ✗ D. $A\cap(B\cup C)=(A\cup B)\cap(A\cap C)$

Q.54 $\tan^2 x = 1 - a^2$ எனில், $\sec x + \tan^3 x \operatorname{cosec} x$ இன் மதிப்பு ________ ஆகும்.

Ans
- ✗ A. $(2+a^2)^{\frac{3}{2}}$
- ✓ B. $(2-a^2)^{\frac{3}{2}}$
- ✗ C. $(1+a^2)^{\frac{3}{2}}$
- ✗ D. $(1-a^2)^{\frac{3}{2}}$

Q.55 ராம் மற்றும் ஷியாம் ஆகிய இரு விண்ணப்பதாரர்கள் ஒரு பயிற்சி நிறுவனத்தில் சேர்க்கை பெற விரும்புகிறார்கள். அவர்களின் தேர்வுகள் சார்பற்ற நிகழ்ச்சிகள் எனக் கொள்க. ராம் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நிகழ்தகவு 0.8 மற்றும் அவர்களில் சரியாக ஒருவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நிகழ்தகவு 0.7 எனில் ஷியாம் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான நிகழ்தகவைக் கண்டறியவும்.

Ans
- ✓ A. $\frac{1}{6}$
- ✗ B. $\frac{3}{8}$
- ✗ C. $\frac{4}{9}$
- ✗ D. $\frac{2}{9}$

Q.56 X என்ற கணத்தில் 5 உறுப்புகள் உள்ளன; எனில், X இன் தகு உட்கணங்களின் எண்ணிக்கையைக் காண்க.

Ans
- ✗ A. 32
- ✓ B. 31
- ✗ C. 64
- ✗ D. 25

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

**Q.57** P(-14, 4) மற்றும் Q(2, -4) ஆகிய இரு புள்ளிகளை இணைக்கும் ஒரு கோட்டுத்துண்டின் நடுப்புள்ளி ___________ ஆகும்.

**Ans**
- ✗ A. (-4, 1)
- ✗ B. (-6, -2)
- ✗ C. (-7, 0)
- ✓ D. (-6, 0)

**Q.58** ஒரு சதுர வயலின் பரப்பளவு 6561 $m^2$ ஆகும். அதன் சுற்றளவு (m இல்) ___________ ஆகும்

**Ans**
- ✗ A. 306
- ✓ B. 324
- ✗ C. 342
- ✗ D. 288

**Q.59** 6 ஊழியர்களின் சம்பளம் (₹1,000 இல்) 30, 35, 40, 50, 60 மற்றும் 200 ஆகும். இந்தத் தரவின் ரேஞ்ச் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிகபட்ச சம்பளம் (₹200,000) நீக்கப்பட்டால், புதிய ரேஞ்ஜிற்கும் மற்றும் அசல் ரேஞ்ஜிற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்னவாக இருக்கும்?

**Ans**
- ✗ A. 60 (₹1,000 இல்)
- ✓ B. 140 (₹1,000 இல்)
- ✗ C. 170 (₹1,000 இல்)
- ✗ D. 80 (₹1,000 இல்)

**Q.60** இரண்டு தொடர்ச்சியான நேர்ம இயல் எண்களின் பெருக்கல் பலன் 156 ஆகும். எனில், இரண்டு எண்களில் பெரியது_____

**Ans**
- ✗ A. 27
- ✗ B. 23
- ✗ C. 7
- ✓ D. 13

**Q.61** இரண்டு சீரான பகடைகள் உருட்டப்படுகின்றன. அவற்றின் கூட்டுத்தொகை ஒரு பகா எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு என்ன?

**Ans**
- ✗ A. $\frac{7}{18}$
- ✗ B. $\frac{1}{3}$
- ✓ C. $\frac{5}{12}$
- ✗ D. $\frac{1}{2}$

**Q.62** சோளத்தின் 5 கதிர்களின் எடைகள் முறையே 100, 102, 118, 124, 126 கிராம்கள் ஆகும். எனில், அதன் திட்ட விலக்கத்தைக் காண்க. (உங்கள் விடையை இரண்டு தசம இடங்களுக்குத் திருத்தவும்.)

**Ans**
- ✗ A. 11.22 கிராம்கள்
- ✗ B. 12.25 கிராம்கள்
- ✓ C. 10.95 கிராம்கள்
- ✗ D. 14.15 கிராம்கள்

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : **Blackbook : English Vocabulary**

GET IT ON Google Play

**Q.63** ஒரு திண்மக் கூம்பின் உயரம் 24 cm மற்றும் அதன் அடிப்பக்க ஆரம் 7 cm ஆகும். அக்கூம்பின் உச்சியிலிருந்து 16 cm தொலைவில், அடிப்பக்கத்திற்கு இணையான ஒரு தளத்தைக் கொண்டு அது வெட்டப்படுகிறது. அதிலிருந்து சிறிய கூம்பு நீக்கப்பட்ட பிறகு, மீதமுள்ள பகுதி ஒரு கூம்பின் இடைக்கண்டம் (frustum) ஆக கிடைக்கிறது. அந்தக் கூம்பின் இடைக்கண்டத்தின் மொத்தப் புறப்பரப்பைக் கண்டறியவும்.

**Ans**
- ✗ A. $140\pi\ cm^2$
- ✗ B. $300\ cm^2$
- ✗ C. $336\ cm^2$
- ✓ D. $168\pi\ cm^2$

**Q.64** 3125 நபர்களிடம் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், 863 நபர்கள் தேநீரையும் மற்றும் 2561 நபர்கள் காபியையும் விரும்புகிறார்கள். கணக்கெடுப்பில் பங்கேற்ற ஒவ்வொரு நபரும் தேநீர் மற்றும் காபி ஆகியவற்றில் குறைந்தபட்சம் ஒரு பானத்தையாவது விரும்புகிறார்கள் எனக் கொடுக்கப்பட்டால், இரண்டையும் விரும்பும் நபர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை ________ ஆகும்.

**Ans**
- ✗ A. 308
- ✓ B. 299
- ✗ C. 305
- ✗ D. 294

**Q.65** தரையில் உள்ள ஒரு புள்ளி P இலிருந்து ஒரு கோபுரத்தின் உச்சியின் ஏற்றக்கோணம் 30° ஆகும். கோபுரத்தை நோக்கி 36 m தூரம் நடந்த பிறகு ஏற்றக்கோணம் 60° ஆக மாறுகிறது எனில் கோபுரத்தின் உயரம் என்ன?

**Ans**
- ✗ A. $6\sqrt{3}$ m
- ✗ B. $36\sqrt{3}$ m
- ✗ C. $12\sqrt{3}$ m
- ✓ D. $18\sqrt{3}$ m

Section : **Basic Science and Engineering**

**Q.66** ஒரு 0–200 V வோல்ட்மீட்டர் புல்-ஸ்கேல் ரீடிங்கில், ±1% உத்தரவாதமளிக்கப்பட்ட துல்லியத்தன்மையைக் கொண்டுள்ளது. இந்த கருவி 50 V-ஐக் காட்டினால், அளவிடப்படும் உண்மையான மின்னழுத்தமானது, ________க்கு இடையில் இருக்கும்.

**Ans**
- ✓ A. 48.0 V மற்றும் 52.0 V
- ✗ B. 49.5 V மற்றும் 50.5 V
- ✗ C. 49.0 V மற்றும் 51.0 V
- ✗ D. 47.5 V மற்றும் 52.5 V

**Q.67** ஒரு கிடைமட்டக் கடத்து ரைல் ஆனது, செங்குத்தாக கீழ்நோக்கிச் செயல்படும் ஒரு சீரான காந்தப்புலத்தில், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி மின்னோட்டத்தைக் கொண்டு செல்கிறது. அந்த ரைலானது சுதந்திரமாக நகரக்கூடிய வகையில் இருந்தால், காந்த விசை எந்தத் திசையில் செயல்படும்?

**Ans**
- ✓ A. ரைலானது மின்னோட்டம் மற்றும் காந்தப்புலம் இரண்டிற்கும் செங்குத்தாக, தெற்கு நோக்கி முடுக்கமடையும்.
- ✗ B. ரைலானது காந்தப்புலத்திற்கு இணையாக, நேரடியாக கீழ்நோக்கி முடுக்கமடையும்.
- ✗ C. ரைலானது காந்தப்புலத்தின் திசையிலேயே, நேரடியாக மேல்நோக்கி முடுக்கமடையும்.
- ✗ D. ரைலானது மின்னோட்டம் பாயும் திசையிலேயே, நேரடியாக மேற்கு நோக்கி முடுக்கமடையும்.

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary

GET IT ON Google Play

**Q.68** காற்றில், 2 μC மதிப்புள்ள ஒரு புள்ளி மின்னூட்டமானது, மற்றொரு புள்ளி மின்னூட்டத்திலிருந்து 0.5 m தொலைவில் வைக்கப்பட்டுள்ளது. இப்புள்ளியில் மின்புலச் செறிவின் எண்மதிப்பு என்ன?

**Ans**

❌ A. $1.8 \times 10^4$ N/C

✔ B. $7.2 \times 10^4$ N/C

❌ C. $3.6 \times 10^4$ N/C

❌ D. $4.5 \times 10^4$ N/C

**Q.69** ஒரு விண்வெளி வீரர் பூமியிலிருந்து நிலவுக்கு ஓர் உலோகத் துண்டைக் கொண்டு செல்கிறார். இந்த முழுப்பயணத்தின் போது, அந்த உலோகத் துண்டின் எந்த இயற்பியல் அளவானது மாறாமல் இருக்கும்?

**Ans**

✔ A. நிறை

❌ B. அதன் மீது செயல்படும் வளிமண்டல அழுத்தம்

❌ C. எடை

❌ D. அதன் மீது செயல்படும் ஈர்ப்பு விசை

**Q.70** ஒரு குறிப்பிட்ட மின்மாற்றியின் செகண்டரி மின்னழுத்தத்திற்கு, ஒரு முழு அலை பிரிட்ஜ் திருத்தியின் (full-wave bridge rectifier) உச்ச எதிர் மின்னழுத்தத் (peak inverse voltage) (PIV) தேவையானது, ஒரு சென்டர்-டேப்டு முழு அலை திருத்தியின் உச்ச எதிர் மின்னழுத்தத் தேவையுடன் எவ்வாறு ஒப்பிடப்படுகிறது?

**Ans**

✔ A. பிரிட்ஜ் திருத்திக்கு ஒரு டையோடுக்கு குறைந்த உச்ச எதிர் மின்னழுத்த (PIV) மதிப்பீடே தேவைப்படுகிறது.

❌ B. பிரிட்ஜ் திருத்திக்கு எந்த ஒரு உச்ச எதிர் மின்னழுத்த (PIV) மதிப்பீடும் தேவையில்லை.

❌ C. பிரிட்ஜ் திருத்திக்கு ஒரு டையோடுக்கு அதிக உச்ச எதிர் மின்னழுத்த (PIV) மதிப்பீடு தேவைப்படுகிறது.

❌ D. இரண்டுமே ஒரு டையோடுக்கு ஒரே உச்ச எதிர் மின்னழுத்த (PIV) மதிப்பீட்டைத் தேவையாகக் கொண்டுள்ளன.

**Q.71** ஆம்பியரின் மின்சுற்று விதியானது, ஒரு மூடிய பாதையைச் சுற்றியுள்ள காந்தப்புலத்தின் கோட்டுத்தொகையீட்டை (line integral) ________உடன் தொடர்புபடுத்துகிறது.

**Ans**

❌ A. அப்பாதையின் வழியே பாயும் காந்தப்பாயம்.

❌ B. அப்பாதையினால் சூழப்பட்ட மின்தடை.

✔ C. அப்பாதையினால் சூழப்பட்ட நிகர மின்னோட்டம்.

❌ D. அப்பாதையினால் சூழப்பட்ட மின்புலம்.

**Q.72** ஒரு பொறியாளர் இரண்டு வோல்ட்மீட்டர்களை ஒப்பிடுகிறார். வோல்ட்மீட்டர் B-ஐ விட, வோல்ட்மீட்டர் A ஆனது அதிக உணர்திறனைக் (sensitivity) கொண்டிருந்தால், அதன் சாத்தியமான நடைமுறை விளைவு என்னவாக இருக்க வாய்ப்புள்ளது?

**Ans**

✔ A. வோல்ட்மீடர் A ஆனது, வோல்ட்மீட்டர் B-ஐ விட சிறிய மின்னழுத்த மாற்றங்களைக் கண்டறிய முடியும்.

❌ B. வோல்ட்மீட்டர் A ஆனது வோல்ட்மீட்டர் B-ஐ விட பெரிய மின்னழுத்தங்களை அளவிட முடியும்.

❌ C. வோல்ட்மீட்டர் A ஆனது வோல்ட்மீட்டர் B-ஐ விட அனைத்து அளவீடுகளிலும் மிகவும் துல்லியமானது

❌ D. மின் இரைச்சலால் வோல்ட்மீட்டர் A ஆனது, வோல்ட்மீட்டர் B-ஐ விட குறைவாகப் பாதிக்கப்படுகிறது.

**Q.73** ஒரு நபர் பேருந்து நிறுத்தத்தில் ஐந்து நிமிடங்கள் அசையாமல் நின்று கொண்டு ஒரு சூட்கேஸைப் பிடித்துள்ளார். முழு நேரமும், அந்த சூட்கேஸ்-ஆனது ஒரே நிலையில் இருப்பதனால், அந்த நபரால் அந்த சூட்கேஸின் மீது செய்யப்பட்ட வேலை என்ன?

**Ans**

❌ A. நேர்மறை

❌ B. சூட்கேஸின் எடைக்குச் சமம்

❌ C. எதிர்மறை

✔ D. பூஜ்ஜியம்

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary GET IT ON Google Play

**Q.74** **பின்வரும் கூற்றுகளில் எது, இரும (binary) எண் முறையைச் சரியாக விவரிக்கிறது?**

**Ans**
- ✗ A. இது 0 மற்றும் 1 ஐத் தவிர மற்ற குறியீடுகளைப் பயன்படுத்துகிறது
- ✗ B. இது தசம முறைக்கு சமமானது
- ✗ C. இது மதிப்புகளைக் குறிக்க பத்து குறியீடுகளைப் பயன்படுத்துகிறது
- ✓ D. இது 0 மற்றும் 1 ஆகிய இரண்டு குறியீடுகளை மட்டுமே பயன்படுத்துகிறது

**Q.75** **100 N/C மதிப்புள்ள ஒரு மின்புலம் வலதுபுறமாகச் செயல்படுகிறது. எனில், இந்த மின்புலத்தில் வைக்கப்படும் ஒரு +2 C மின்னூட்டத்தின் மீது செயல்படும் மின்விசை யாது?**

**Ans**
- ✗ A. 100 N இடதுபுறம்
- ✗ B. 200 N இடதுபுறம்
- ✓ C. 200 N வலதுபுறம்
- ✗ D. 100 N வலதுபுறம்

**Q.76** **ஒரு மின்னூட்டத்தினால் ஒரு புள்ளியில் ஏற்படும் மின்னழுத்தமானது 100 வோல்ட் எனில், அதே மின்னூட்டத்திலிருந்து இரு மடங்கு தொலைவில் மின்னழுத்தம் என்னவாக இருக்கும்?**

**Ans**
- ✗ A. 25 வோல்ட்
- ✗ B. 200 வோல்ட்
- ✓ C. 50 வோல்ட்
- ✗ D. 100 வோல்ட்

**Q.77** **ஒரு புரோகிராமர், மற்றொரு சப்ரொட்டீனை (subroutine) அழைக்கும் ஒரு சப்ரொட்டீனை எழுதுகிறார். எக்ஸிகியூஷனுக்குப் பின், 8085 மைக்ரோபிராசஸர் சரியான இடத்திற்குத் திரும்புவதை உறுதிசெய்ய, எந்த ரெஜிஸ்டர்-ஆனது மிக முக்கியமான பங்கை வகிக்கிறது?**

**Ans**
- ✗ A. அக்யூமுலேட்டர்
- ✗ B. இன்ஸ்ட்ரக்ஷன் ரெஜிஸ்டர்
- ✓ C. ஸ்டேக் பாயிண்டர்
- ✗ D. ரெஜிஸ்டர் B

**Q.78** **ஒரு சென்டர் டேப்டு ஃபுல்-வேவ் ரெக்டிஃபையர் (center-tapped full-wave rectifier)-ஆனது, ஒவ்வொரு பாதி சுருளுக்கும் (half winding) 200 $V_{RMS}$ என்ற ஒரு டிரான்ஸ்பார்மர் செகண்டரி மின்னழுத்தத்தைக் கொண்டுள்ளது. எனில், நம்பகமான செயல்பாட்டிற்கு, பின்வருவனவற்றில் எந்தக் குறைந்தபட்ச டயோடு உச்ச எதிர் மின்னழுத்த (Peak Inverse Voltage (PIV) மதிப்பானது தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்?**

**Ans**
- ✓ A. 600 V
- ✗ B. 550 V
- ✗ C. 200 V
- ✗ D. 400 V

**Q.79** **இரு சமமான நேர்மறை புள்ளி மின்னூட்டங்களுக்கு, அவற்றிற்கு இடைப்பட்ட பகுதியில் ஒவ்வொரு மின்னூட்டத்தாலும் உருவாக்கப்படும் தனித்தனி மின்புலக் கூறுகளின் திசை யாது?**

**Ans**
- ✗ A. ஒவ்வொரு மின்னூட்டத்தையும் நோக்கி
- ✓ B. ஒவ்வொரு மின்னூட்டத்திலிருந்தும் விலகி
- ✗ C. இரண்டு மின்னூட்டங்களையும் சுற்றுதல்
- ✗ D. அவற்றிற்கு இடையே அனைத்து இடங்களிலும் பூஜ்ஜியம்

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary

GET IT ON Google Play

**Q.80** சீரான காந்தப்புலத்தில் மின்னூட்டம் பெற்ற துகள் ஒன்று வட்டப்பாதையில் இயங்குகிறது. இந்த இயக்கத்தின் போது எந்த இயற்பியல் அளவு மாறாமல் இருக்கும்?

**Ans**
- ✗ A. திசைவேகத்தின் திசை
- ✗ B. உந்தத்தின் திசை
- ✓ C. வேகம்
- ✗ D. காந்த விசை

**Q.81** ஒரு ஸ்பிரிங் அழுத்தப்பட்டு, 50 J மீள் நிலை ஆற்றலைச் சேமித்து வைக்கிறது. அது உராய்வற்ற ஒரு கிடைமட்டப் பரப்பின் மீது ஓய்வு நிலையில் உள்ள ஒரு பிளாக் உடன் இணைக்கப்பட்டுள்ளது. ஸ்பிரிங் விடுவிக்கப்பட்ட பிறகு, அந்த பிளாக் பெறும் அதிகபட்ச இயக்க ஆற்றல் எவ்வளவு?

**Ans**
- ✗ A. 100 J
- ✓ B. 50 J
- ✗ C. 25 J
- ✗ D. 75 J

**Q.82** ஒரு சோதனை அமைப்பின் எந்தப் பண்பு, ஒரு குறிப்பிட்ட நோக்கு புள்ளியில், ஒரு நிலையான மூல மின்னூட்டத்தினால் உருவாக்கப்படும் உள்ளார்ந்த மின்புல திசையனைப் (intrinsic electric field vector) பாதிக்காது?

**Ans**
- ✗ A. நிலையான மூல மின்னூட்டத்தின் இயற்கணிதக் குறி
- ✗ B. சுற்றுப்புற மின்கடத்தா ஊடகத்தின் அனுமதிப்புத் திறன்
- ✗ C. மூல மின்னூட்ட இருப்பிடத்திலிருந்து அமைந்துள்ள ஆரத் தொலைவு
- ✓ D. சோதனைத் துகள் கொண்டுள்ள மின்னூட்டத்தின் எண்மதிப்பு

**Q.83** ஒரு கம்பிச்சுருள் 100 சுற்றுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சுற்றுடனும் தொடர்புடைய காந்தப்பாயமானது, 1 s இல் 0.05 Wb மாறுபட்டால், தூண்டப்பட்ட emf, ________ ஆகும்.

**Ans**
- ✓ A. 5 V
- ✗ B. 10 V
- ✗ C. 2.5 V
- ✗ D. 20 V

**Q.84** சமமான வேகத்தில் இயங்கும் இரு துகள்களின் மீது இரண்டு சமமான விசைகள் செயல்படுகின்றன. விசை F1 ஆனது, துகள் P-இன் திசைவேகத்தின் திசையிலேயே செயல்படுகிறது; அதேசமயம், விசை F2 ஆனது துகள் Q-இன் திசைவேகத்திற்கு 60° கோணத்தில் செயல்படுகிறது. எனில், பின்வரும் எந்தக் கூற்று சரியானது?

**Ans**
- ✗ A. இரண்டு விசைகளும் ஒரே அளவிலான திறனை (power) வழங்குகின்றன.
- ✗ B. திறன்களின் விகிதம் $\sqrt{3}:1$ ஆகும்.
- ✗ C. துகள் Q ஆனது, துகள் P பெறும் உடனடித் (instantaneous) திறனைப் போல் இருமடங்கைப் பெறுகிறது.
- ✓ D. துகள் P ஆனது துகள் Q பெறும் உடனடித் திறனைப் போல் இருமடங்கைப் பெறுகிறது.

**Q.85** ஒரு சீரான மின்புலத்தில், இரண்டு புள்ளிகளுக்கு இடையேயான மின்னழுத்த வேறுபாடு அவை பிரிக்கப்பட்டிருக்கும் தூரத்தை எவ்வாறு சார்ந்துள்ளது?

**Ans**
- ✗ A. தூரத்துடன் மின்னழுத்த வேறுபாடு நேரியல் அல்லாத முறையில் மாறுகிறது
- ✗ B. தூரம் அதிகரிக்கும் போது மின்னழுத்த வேறுபாடு குறைகிறது
- ✓ C. தூரத்துடன் மின்னழுத்த வேறுபாடு நேரியல் ரீதியாக அதிகரிக்கிறது
- ✗ D. தூரத்தைப் பொருட்படுத்தாமல் மின்னழுத்த வேறுபாடு மாறாமல் உள்ளது

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : **Blackbook : English Vocabulary** GET IT ON Google Play

**Q.86** ஒரு JFET இன் பரிமாற்றப் பண்பில் (transfer characteristic) சாத்தியமான அதிகபட்ச வடிகால் மின்னோட்டத்தை ($I_{dss}$) முதன்மையாக தீர்மானிக்கும் அளவுரு எது?

**Ans**
✔ A. சேனலின் இயற்பியல் பண்புகள் மற்றும் $V_{GS}$=0 V

✘ B. சாதனத்தின் தொடக்கநிலை மின்னழுத்தம் (threshold voltage)

✘ C. பிஞ்ச்-ஆஃப் (pinch-off) நிலைக்கு மேல் உள்ள டிரைன்-சோர்ஸ் மின்னழுத்தத்தின் எண்மதிப்பு

✘ D. சோர்ஸ்-க்கும் கிரவுண்டுக்கும் இடையிலான மின்தடை

**Q.87** ஒரு ஆய்வகத்தில், ஒரு ஆராய்ச்சியாளர் வட்ட வடிவமற்ற ஒரு மின்கடத்து சட்டகத்தை, இடஞ்சார்ந்த சீரற்ற ஒரு காந்தப்புலத்தின் வழியே, மாறுபடும் கோண வேகத்தில் சுழற்றுகிறார். ஒரு முழுமையான சுழற்சியின் போது, தூண்டப்பட்ட மின்னியக்க விசை (emf) எவ்வாறு செயல்படும் என்பதை, பின்வரும் விளைவுகளில் எது மிகத்துல்லியமாக விவரிக்கிறது?

**Ans**
✘ A. சட்டகத்தின் வேகம் அல்லது புலத்தின் பண்புகளைப் பொருட்படுத்தாமல், emf ஆனது சீரான கால இடைவெளிகளில் சுழியாகக் குறையும்.

✔ B. emf ஆனது, மாறுபடும் கோண வேகம் மற்றும் புலத்தின் இடஞ்சார்ந்த மாறுபாடு ஆகிய இரண்டையும் பிரதிபலிக்கும் வகையில், ஒழுங்கற்ற உச்சங்கள் மற்றும் பள்ளங்களை காட்டும்.

✘ C. சுழற்சி முழுவதும், emf ஆனது சீரான வீச்சு மற்றும் அதிர்வெண் கொண்ட ஒரு சைனூசாய்டலாக இருக்கும்.

✘ D. சட்டகத்தின் வேகம் அல்லது காந்தப்புல மாற்றங்களால் பாதிக்கப்படாமல், emf ஆனது சுழற்சி முழுவதும் மாறாமல் நிலையாக இருக்கும்.

**Q.88** ஒரு டிஜிட்டல் பேனல் மீட்டர், அளவீடுகளைத் தசம வடிவில் காட்டுகிறது. தூய பைனரிக்கு பதிலாக, BCD குறியீட்டு முறையைப் பயன்படுத்துவதன் ஒரு முக்கிய நன்மை என்ன?

**Ans**
✘ A. இது பெரிய எண்களுக்கான நினைவகத் திறனை அதிகரிக்கிறது.

✘ B. இது ஒவ்வொரு இலக்கத்திற்கும் தேவைப்படும் வயர்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறது.

✔ C. இது டிஸ்ப்ளே சர்க்யூட்டுகளுக்கான சிக்கலான பைனரி-டு-டெசிமல் மாற்றலுக்கான லாஜிக்கைத் தவிர்க்கிறது.

✘ D.
இது ஒவ்வொரு இலக்கத்திற்கும் உள்ளமைக்கப்பட்ட பிழை திருத்தத்தை வழங்குகிறது.

**Q.89** ஒரு நீண்ட வரிச்சுருளின் வழியே 2 A மின்னோட்டம் பாயும் போது, அதன் உள்ளே ஏற்படும் காந்தப்புலம் $4 \times 10^{-3}$ T ஆகும். மின்னோட்டத்தின் அளவு 6 A ஆக அதிகரிக்கப்பட்டால், அதன் காந்தப்புலம் என்னவாக மாறும்?

**Ans**
✔ A. $1.2 \times 10^{-2}$ T

✘ B. $2.4 \times 10^{-2}$ T

✘ C. $4 \times 10^{-3}$ T

✘ D. $8 \times 10^{-3}$ T

**Q.90** 0.5 T மதிப்புள்ள காந்தப்புலத்திற்குச் செங்குத்தாக $2 \times 10^{6}$ m/s வேகத்தில் ஒரு எலக்ட்ரான் இயங்குகிறது. அந்த எலக்ட்ரான் மின்னூட்டத்தின் எண்மதிப்பு $1.6 \times 10^{-19}$ C எனில், எலக்ட்ரானின் மீது செயல்படும் காந்த விசை யாது?

**Ans**
✘ A. $3.2 \times 10^{-13}$ N

✘ B. $8.0 \times 10^{-14}$ N

✘ C. $6.4 \times 10^{-13}$ N

✔ D. $1.6 \times 10^{-13}$ N

**Q.91** படுகதிர் ஒளியின் செறிவு அதிகரிக்கும் போது, ஒரு ஒளிமின்தடையாக்கியின் (photoresistor) மின்தடைக்கு என்ன நிகழ்கிறது?

**Ans**
✘ A. மின்தடை மாறாமல் இருக்கிறது

✘ B. மின்தடை சுழியாகிறது

✘ C. மின்தடை அதிகரிக்கிறது

✔ D. மின்தடை குறைகிறது

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

**Q.92** இரு சமமான நேர்மறை (ஒத்த) புள்ளி மின்னூட்டங்களை இணைக்கும் கோட்டின் மீதான எந்த இடத்தில் நிகர மின்புலச் செறிவு சுழியாக இருக்கும்?

**Ans**

❌ A. ஏதேனும் ஒரு மின்னூட்டம் உள்ள இடத்தில்

❌ B. நேர்மறை மின்னூட்டத்திற்கு அருகில் உள்ள ஒரு புள்ளியில்

❌ C. இரண்டு மின்னூட்டங்களிலிருந்து தொலைவில் உள்ள ஒரு புள்ளியில்

✔ D. மின்னூட்டங்களுக்கு இடையிலான நடுப்புள்ளியில்

**Q.93** ஒரு எளிய மின்சுற்றில், ஒரு மின் உருகிழையின் செயல்பாடு என்ன?

**Ans**

❌ A. இது எதிர்கால பயன்பாட்டிற்காக மின்சார ஆற்றலை சேமிக்கிறது

❌ B. இது சுற்றில் மின்னழுத்தத்தை அதிகரிக்கிறது

❌ C. இது மின்னோட்டத்தை ஒளியாக மாற்றுகிறது

✔ D. மின்னோட்டம் மிக அதிகமாக இருக்கும்போது, இது மின்சுற்றைத் துண்டிக்கிறது

**Q.94** ஒரு துகள் மீது, அடுத்தடுத்த மூன்று சமமான இடப்பெயர்ச்சிகளின் போது, ஒரு மாறா விசை செயல்படுகிறது. அவ்விசைக்கும், இடப்பெயர்ச்சிக்கும் இடைப்பட்ட கோணங்கள் முறையே 0°, 60° மற்றும் 180° ஆகும். எனில், செய்யப்பட்ட வேலையின் தன்மையை, பின்வரும் எந்தக் கூற்று சரியாக விவரிக்கிறது?

**Ans**

❌ A. மூன்றாவது இடப்பெயர்ச்சியின் போது செய்யப்பட்ட வேலை சுழியாகும்.

✔ B. முதல் இரண்டு இடப்பெயர்ச்சிகளின் போது செய்யப்பட்ட வேலை நேர்மறையாகவும், மூன்றாவது இடப்பெயர்ச்சியின் போது எதிர்மறையாகவும் இருக்கும்.

❌ C. இரண்டாவது இடப்பெயர்ச்சியின் போது செய்யப்பட்ட வேலை பெருமமாகும்.

❌ D. மூன்று இடப்பெயர்ச்சிகளின் போதும் செய்யப்பட்ட வேலை சமமாகும்.

**Q.95** பின்வரும் மாற்றங்களில் எது, ஒரு உலோக மின்கடத்தியின் மின்தடையாக்கத்தைக் குறைக்கும்?

**Ans**

❌ A. கடத்தித் தடிமனை குறைப்பது

❌ B. கடத்தியின் நீளத்தை அதிகரிப்பது

❌ C. கடத்தியின் வெப்பநிலையை அதிகரிப்பது

✔ D. கடத்தி தடிமனை அதிகரிப்பது

**Q.96** ஒரு மின்னிழை விளக்கு வெப்பமடையும் போது, அதற்கு ஓம் விதியானது பொருந்தாமல் போவது ஏன்?

**Ans**

❌ A.
மின்னோட்டம் எப்போதும் குறைகிறது

❌ B. அதிக மின்னழுத்தத்தில் விளக்கு அணைந்து விடுகிறது

❌ C.
மின்தடை மாறாமல் இருக்கும்

✔ D. வெப்பநிலை அதிகரிக்கும் போது மின்தடை அதிகரிக்கிறது

**Q.97** 8051 மைக்ரோகண்ட்ரோலரில், MOV எனும் கட்டளையின் செயல்பாட்டை பின்வரும் எந்த கூற்று சிறப்பாக விவரிக்கிறது?

**Ans**

❌ A. இது அக்குமுலேட்டர் ரெஜிஸ்டரில் பிட்-களை ஷிப்ட் செய்கிறது

❌ B. இது இரண்டு ரெஜிஸ்டர்களுக்கு இடையே கணித செயல்பாடுகளை நிறைவேற்றுகிறது

❌ C. இது மைக்ரோகண்ட்ரோலரில், வெளிப்புற இண்டரப்ட்-களை (interrupts) செயல்படுத்துகிறது

✔ D. இது ஒரு மூலத்திலிருந்து, ஒரு இலக்கு ரெஜிஸ்டர் (destination register) அல்லது மெமரி லொக்கேஷனுக்கு தரவை மாற்றுகிறது

**Q.98** ஒரு ஸ்பிரிங் அதன் ஆரம்ப அழுத்தத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு அழுத்தப்படுகிறது. ஆரம்பத்தில் சேமிக்கப்பட்ட ஆற்றலுடன் (18 J) ஒப்பிடும்போது, புதிய சேமிக்கப்பட்ட ஆற்றல் ______ ஆகும்.

**Ans**

❌ A. 4 J

✔ B. 2 J

❌ C. 6 J

❌ D. 8 J

Get India's No 1 Vocab Preparation App for FREE : Blackbook : English Vocabulary
GET IT ON Google Play

**Q.99** மின்னோட்டம் பாயும் ஒரு நேர் கடத்தியானது நேர் x-அச்சில் வைக்கப்பட்டுள்ளது. ஒரு சீரான காந்தப்புலமானது நேர் z-அச்சின் திசையில் செலுத்தப்பட்டால், காந்த விசையானது எந்தத் திசையில் கடத்தியின் மீது செயல்படும்?

**Ans**

✗ A. எதிர் x அச்சில்

✗ B. நேர் y-அச்சில்

✗ C. நேர் z-அச்சில்

✓ D. எதிர் y-அச்சில்

**Q.100** ஒரு மாணவர் ஒரு திரவத்தின் அடர்த்தியைக் கண்டறிந்து, அதன் சார்பு அடர்த்தியைக் (relative density) கணக்கிட அதை நீரின் அடர்த்தியுடன் ஒப்பிடுகிறார். இந்த இரண்டு அளவுகளையும் பின்வரும் எந்தக் கூற்று சரியாக வேறுபடுத்துகிறது?

**Ans**

✓ A. அடர்த்தி அலகுகளைக் கொண்டுள்ளது, அதேசமயம் சார்பு அடர்த்தி ஒரு பரிமாணமற்ற அளவு ஆகும்.

✗ B. சார்பு அடர்த்தி எப்போதும் அடர்த்தியை விட எண்ணியல் ரீதியாக அதிகமாக இருக்கும்.

✗ C. ஒரு பொருளின் அடர்த்தியை நீரின் அடர்த்தியால் வகுப்பதன் மூலம் அடர்த்தி பெறப்படுகிறது.

✗ D. அடர்த்தி மற்றும் சார்பு அடர்த்தி ஆகிய இரண்டும் $kg/m^3$ என்ற SI அலகைக் கொண்டுள்ளன.

"

Blackbook

Get India's No 1 Vocab Preparation App for FREE : **Blackbook : English Vocabulary** GET IT ON Google Play